செய்தி வெளியீடு எண். 114 நாள்: 23.02.2018

**சுற்றுலாத்துறை சார்பாக பள்ளி மாணவர்களிடையே வரலாறு மற்றும் சுற்றுலாத் தலங்களின் முக்கியத்துவத்தை விளக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு விழிப்புணர்வு சுற்றுலா 2018-ஐ மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து மாணவர்களை வழி அனுப்பி வைத்தார்**

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சுற்றுலாத்துறை சார்பாக பள்ளி மாணவர்களிடையே வரலாறு மற்றும் சுற்றுலாத் தலங்களின் முக்கியத்துவத்தை விளக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு விழிப்புணர்வு சுற்றுலா 2018-ஐ மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து மாணவர்களை வழி அனுப்பி வைத்தார்

2017-2018 ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களின் மானிய கோரிக்கை அறிவிப்பில் தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவ / மாணவிகளுக்கு ஒரு நாள் விழிப்புணர்வு சுற்றுலா நடத்த அறிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறையின் மூலமாக திருவள்ளூர் மாவட்ட பள்ளி மாணவ/ மாணவிகளுக்கிடையே சுற்றுலா தலங்களின் முக்கியத்துவம் மற்றும் வரலாறு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து 150 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவ / மாணவிகளை சுற்றுலா அழைத்து செல்ல திருவள்ளூர் மாவட்டத்திற்கு அருகில் உள்ள சென்னை மாவட்டத்திலுள்ள வள்ளுவர் கோட்டம், பிர்லா பிளானட்டோரியம், பாம்பு பண்ணை (Snake Park), குழந்தைகள் பூங்கா(Childrens Park) மற்றும் காந்தி நினைவிடம், ராஜாஜி நினைவிடம் போன்ற சுற்றுலாத் தலங்களுக்கு பள்ளி மாணவ / மாணவிகளுக்கு சுற்றுலா பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் சுற்றுலாவாகும்.

பள்ளி மாணவ, மாணவிகளுக்கான பேருந்து வசதி, காலை, மதிய உணவுகள், சிற்றுண்டி, பள்ளி தோல் பை, தொப்பி மற்றும் சான்றிதழ் அனைத்தும் சுற்றுலாத் துறையின் மூலம் வழங்கப்பட்டது. இது ஒரு பள்ளி மாணவ / மாணவிகளுக்கான சிறப்பு வாய்ந்த விழிப்புணர்வு சுற்றுலாவாகும். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர். த.இராஜேந்திரன், சுற்றுலா அலுவலர் திரு.து.வின்செண்ட் ஜான்பிரிட்டோ மற்றும் துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**